# CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE

මැතිවරණ ප්‍රචණ්ඩත්වය නිරීක්ෂණ මධ්‍යස්ථානය

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்

No 6/5, Layards Road, Colombo 05, **Tel:** +094-11 2505980/+094-11 2505293

**Fax**: +094-11 2505228 **E-mail**: cmev@cpalanka.org **Web**: www.cmev.org


**20ஆம் திகதி, ஆவணி மாதம் வருடம் 2019. கொழும்பு - இலங்கை. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ச அவர்கள், தமது பிரஜாவுரிமையை அகற்றிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் வாக்காளர் பட்டியலில் பதிவுசெய்து, வாக்களித்தமை தொடர்பில் நியாயமான விசாரணை ஒன்றினை உடனடியாக நடாத்த வேண்டும்.**

இன்னும் சில நாட்களில் நடாத்தப்படவுள்ள இந்நாட்டின் எட்டாவது சனாதிபதித் தேர்தலுக்கென ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிடவுள்ள பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் நந்தசேன கோட்டாபய ராஜபக்ச அவர்கள் தமது இலங்கைப் பிரஜாவுரிமையை அகற்றிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் அவ்வேளையில் பயன்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியலில் பதிவு செய்திருந்ததாக வெளியாகியுள்ள ஊடக அறிக்கை தொடர்பாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் தமது முழுமையான கவனத்தினை செலுத்தியுள்ளது. வார இறுதி சிங்களப் பத்திரிகை ஒன்றின் பிரதி ஆசிரியர் தற்போது தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றினை செய்திருப்பதுடன் அம்முறைப்பாடு தொடர்பான ஆணைக்குழுவின் தீர்மனமானது சில நாட்களுக்கு முன்னர் வழங்க வேண்டியதாகவிருந்தது.

அதில் காணப்படும் பாரதூரமான நிலைமை யாதெனில் அவர் இந்நாட்டின் பிரஜையாக இல்லாதவொரு பின்னணியில், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் முல்கிரிகல தேர்தல் தொகுதியின் கீழ் வருடாந்த வாக்காளர் பதிவு அட்டவணையில் பதிவு செய்யப்பட்டமையும், 2005இல் இந்நாட்டில் நடாத்தப்பட்ட ஐந்தாவது சனாதிபதித் தேர்தலில் தமது வாக்கினைப் பயன்படுத்தியமையும் ஆகும். இந்நாட்டின் ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய சட்டமானது 1981ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தின் மூலமாகவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அந்த சட்டத்தின் படி இவ்வாறு போலியான வகையில் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்பட்டமை மற்றும் வாக்களித்தமையானது நீதிமன்றத்தில் தண்டனை வழங்கக் கூடிய குற்றமாக குறிப்பிடப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல அரசியலமைப்பின் 89(அ) உறுப்புரையின் படி இலங்கைப் பிரஜையல்லாத ஒருவருக்கு பாராளுமன்ற அல்லது ஜனாதிபதித் தேர்தல் ஆகிய எந்தவொரு தேர்தலில் மட்டுமன்றி மக்கள் கருத்துக் கணிப்பிலும் கூட தமது வாக்கினை பயன்படுத்தும் உரிமை இல்லை.

ஏற்கனவே ஊடகங்கள் தெரிவித்துள்ளதைப் போன்று ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ச அவர்கள் தமது அமெரிக்க பிரஜாவுரிமையை 2003ஆம் ஆண்டில் பெற்றுக் கொண்டுள்ளார். பிறகு 2005 செப்டெம்பர் மாதம் 04ஆம் திகதி இந்நாட்டிற்கு வருகை தந்ததன் பின்னர் விமான நிலையத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய சுற்றுலா வீசா அனுமதிப்பத்திரத்துடன் இந்நாட்டிற்குள் நுழைந்த ராஜபக்ச அவர்கள் அக்காலப்பகுதியினுள் தமது சகோதரராகிய மஹிந்த ராஜபக்ச அவர்களது ஜனாதிபதித் தேர்தலின் பிரசார நடவடிக்கைகளுக்கு தமது பங்களிப்பினை நல்கியுள்ளார். முப்பது நாட்களுக்கு மாத்திரம் செல்லுபடியாகும் சுற்றுலா வீசா மூலமாக இந்நாட்டிற்கு வருகை தந்து அவ்வாறு தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவது இந்த நாட்டின் குடிவரவு குடியகல்வு சட்டத்தின் 45(1)(அ) என்ற நிபந்தனை மீறல்கள் என்பதுடன் தண்டனை வழங்கக் கூடிய குற்றமுமாகும்.

தேர்தல் கண்காணிப்பு அமைப்பு என்ற வகையில் எமது அமைப்பானது தொடர்ச்சியாக சுட்டிக்காட்டுகின்ற விடயமானது இந்த நாட்டில் தூய்மையான அரசியல் கலாசாரம் ஒன்றினைக்

கட்டியெழுப்புவதில் காணப்படுகின்றவொரு பாரிய தடையே சட்டத்தின் ஆளுமையானது உரிய வகையில் உறுதிப்படுத்தாமை மற்றும் காணப்படுகின்ற அக்கறை தொடர்பான ஏற்றுக்கொள்ளலாகும். ராஜபக்ச அவர்கள் மற்றும் அவருடன் தொடர்பான மேற்படி செயற்பாட்டினை ஆராய்கின்ற போது உறுதிப்படுத்தப்படும் மற்றுமொரு விடயம் யாதெனில் அவர் தமது எண்ணத்திற்கேற்றாற் போன்று நாட்டில் காணப்படுகின்ற தேர்தல் சட்டங்களையும் சாதாரண சட்டங்களையும் மீறியிருக்கின்ற நிலைமையாகும்.

சட்டத்தின் முன் யாவரும் சமம் என்பது சட்டத்தின் அடிப்படை எண்ணக்கருவாக காணப்படுகின்ற போதிலும் ராஜபக்ச அவர்களோ நாட்டின் சாதாரண சட்டத்தினை மீறிச் செயற்பட்டுள்ளமையை காணக்கூடியதாக உள்ளது. அவர் இந்த நாட்டின் எட்டாவது நிறைவேற்று ஜனாதிபதியாக பதவி வகிப்பதற்காக பாரிய அளவிலான தேர்தல் பிரசார நடவடிக்கைகளை ஏற்கனவே ஆரம்பித்திருப்பதோடு மேற்படி சுட்டிக்காட்டப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களின் முன் அவர் தமது மெய்யுறுதிப்பாட்டை கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டுமென்பது வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் நிலைப்பாடாகும்.

தமது இரட்டைப் பிரஜாவுரிமையை அகற்றிக் கொள்வது தொடர்பில் பல்வேறு தரப்பினர் குற்றம் சாட்டிய போதும் அக்குற்றச்சாட்டுக்களின் முன்னரும் கூட அமைதியாகவும் தொடர்ச்சியாகவும் தமது தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ராஜபக்ச அவர்களது செயற்பாடானது நிச்சயமாக தேர்தல் செயற்பாட்டின் நேர்மைத்தன்மையை சவாலுக்கு உட்படுத்துகின்ற ஒரு விடயமாகும். வருடாந்தம் வாக்காளர்களை பதிவு செய்வது என்பது மேற்படி ஆணைக்குழுவிற்கு அரசியலமைப்பின் படி அளிக்கப்பட்டுள்ள ஒரு பொறுப்பாகும். அதனை உச்ச மெய்யுறுதிப்பாட்டுடன் இற்றைப்படுத்தப்படுவது உரிய ஆணைக்குழுவின் மூலமாக எதிர்பார்க்கப்படுவதுடன் அவர்களுக்கு உண்மையான தகவல்களை வழங்கி தேர்தல் ஒன்றில் காணப்பட வேண்டிய சுதந்திரமானதும் நீதியானதுமான நிலைப்பாட்டினை உறுதிப்படுத்துவது அனைத்து தகைமைகளையும் கொண்ட வாக்காளர்களின் தலையாய கடமையாகும். இருப்பினும் மேலே குறிப்பிடப்பட்ட செயற்பாட்டின் மூலமாக தெளிவாகும் ஒரு விடயமாவது வாக்காளர் கணக்கெடுப்பு செயற்பாடு தொடர்பில் காணப்பட வேண்டிய நம்பகத்தன்மை இவ்வகையான தவறான செயற்பாடுகளால் இல்லாமல் போகும் என்பதாகும்.

எனவே தேர்தல் ஆணைக்குழுவிற்கு தற்போது பாரிய பொறுப்பொன்று உள்ளது. அதாவது மேற்படி செயற்பாடு தொடர்பாக விரைவானதும் நீதியானதுமான விசாரணை ஒன்றினை நடாத்துவதும், போலியான தகவல்களை வழங்கி தேர்தல் சட்டங்களை மீறியிருக்கும் தரப்பினரை அடையாளம் காண்பதுமேயாகும். தேர்தல் ஆணைக்குழு மாத்திரமன்றி இச்சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய தரப்பினரும்கூட பக்கச்சார்பின்றி செய்யும் பங்களிப்பானது, இந்த நாட்டின் தேர்தல் செயற்பாடு தொடர்பாக வாக்காளர்கள் கொண்டுள்ள நம்பிக்கையை தொடர்ச்சியாக தக்கவைத்துக் கொள்வதற்கு பெரும் உதவியாக அமையும் என்பது தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் நிலைப்பாடாகும்.